நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை - 5.

ந.க.எண். 21599/93 ஆர் 2 நாள் 19.11.93

(102)

**சுற்றறிக்கை**

NOV 1993

பொருள்: குத்தகை - நகராட்சி - நகரியங்களில் உள்ள குத்தகைக்கு விடப்பட்ட கடைகள் மற்றும் பங்குகள் பெயர் மாற்றம் செய்வதை தடுப்பது— சம்பந்தமாக.

பார்வை: அரசு செயலர், ந.நி.ம.கு.வ.துறை, நே.மு.க. எண். 6299/ங6/93-4 நாள் 30.8.93.

• •

நகராட்சி மற்றும் நகரியங்களுக்கு சொந்தமான கடைகளையும், சொத்துக்களையும். பொது ஏலம் மூலம் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட குத்தகைதாரர்களின் பெயர்களில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டு வருவது நகராட்சி நிர்வாக ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு பெயர் மாற்றம் செய்வதினால் இடைத்தரகர்கள் சலுகை பெறுவதுடன் நகராட்சியின் வருமானமும் பாதிக்கப்படுவது தெரிய வந்துள்ளது. உட்குத்தகையை ஊக்கு படுத்தவும், பெயர் மாற்றம் செய்யும் முறை கையாளப்படுகிறது. இது போன்ற முறைகேட்டை உடனடியாக தடை செய்தல் வேண்டும். நகராட்சி விதிகளில் கூட இதுபோன்ற பெயர்மாற்றம் தன்னிச்சையாக செய்வதற்கு வழி வகை செய்யப்படவில்லை. நகராட்சி / நகரிய அனைத்து நிர்வாக அதிகாரிகளும் இனி வரும் காலங்களில் குத்தகை விடப்படும் நகராட்சி சொத்துக்களுக்கு குத்தகை காலத்தின் இடையில் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்ற நிபந்தனை தீர்மானம் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

குத்தகை காலங்களில், குத்தகைதாரர் இறந்து விட்டால், அவரின் வாரிசுதாரருக்கு குத்தகை பெயர் மாற்றம் செய்யாமல், குத்தகைக்கும் நகராட்சிக்கும் சம்பந்தமில்லாத நபர்களுக்கு பெயர் மாற்றம் செய்து நகராட்சி அலுவலர்கள் ஒழுங்கீனம் ஏற்பட உதவுவது தெரிய வந்துள்ளது. எனவே, இனி வரும் காலங்களில் குத்தகை பெயர் மாற்றத்திற்காக, வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பம் மட்டுமே, நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதலுடன், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேற்கண்ட அறிவுரைகளுக்கு புறம்பாக எந்த ஒரு நகராட்சி ஆணையர் மற்ற இதர அலுவலர்கள் நடந்து கொண்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்) ஏ. தசரதன்,
நகராட்சி நிர்வாக ஆணையர் (பொறுப்பு)

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள் / நிர்வாக அதிகாரிகள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

//ஆணைப்படி// அனுப்பப்படுகிறது.

கண்காணிப்பாளர்

22.11.

22/11